19th November 1963] *[திரு. சா. கணேசன்]*

ருக்கே அவமதிப்பு என்று நான் சொல்ல வரவில்லை. (சிரிப்பு.) இம் மாதிரி விஷயங்களில் ஒரு வகை செய்து கொள்வது நல்லது என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அந்த முறையிலே, கட்சித் தலைவர்கள், ஆட்சித் தலைவர் இவர்கள்கூடி ஒரு வரம்பை ஏற்படுத்திக் கொள்வது பொருத்தமாக இருக்கும், சபையின் வருங்காலத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்கு ஒரு வழி கூறலாம். மனதிலே வருத்தம் அதிகமாக இருக்கிறது. குமுறுகிற வருத்தத்தைத் தெரிவிக்க முடியவில்லை என்றால், ஒரு வார்த்தை கூடப் பேசாமல் எழுந்து போய்விட்டால், ஆட்சேபனை இருக்காது. நீங்கள் தீர்ப்புக் கூறிய பிறகு, வாய்ப்புக் கிடைக்கவில்லை, ஆகவே எழுந்து போகிறோம் என்று சொல்வது, சபாநாயகரை அவமதித்ததாக ஆகும். ஒன்றும் கூறாமல் போனால் கூட ஆட்சேபனை இருக்காது.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, கனம் முதல்வர் அவர்கள் எடுத்துக் கூறியதைப் போல், பேசாமல் சென்றால், அதிக அவமரியாதையைத் தருமோ என்று நான் அஞ்சுகிறேன். இப்பொழுதும் கூட ஒவ்வொரு அங்கத்தினரும், அவைத் தலைவருக்கே வணக்கம் தெரிவித்துத் தனித் தனியாக அவையை விட்டுச் செல்லக் கூடிய உரிமை இருக்கிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம், ஒரு காரணத்தை வணக்கமாகத் தெரிவித்துவிட்டு, அத்தகைய ஒரு நோக்கத்தைத் தெரிவித்துவிட்டுச் செல்வதானது அதிக மரியாதையையும் மதிப்பையும் தருவதாகும். அந்தக் காரணத்தினால், அது உணர்ச்சியை வெளிப்படுத்துகிறதென்றே தவிர, அவமதிப்பை வெளிப்படுத்துகிறதென்று அல்ல என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயக ஆட்சியில் சிறுபான்மையினருக்கு இந்த உரிமை தொடர்ந்து இருக்கிற காரணத்தினாலே, பாராளுமன்றத்திலும், வேறு சட்ட மன்றங்களிலும் நடைமுறை மரபாக அதாவது, கன்வென்ஷனாக இருந்து வருகிற காரணத்தினாலே, இந்த முறைக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKxR: I reserve my ruling.

(2) EX-CHIEF MINISTER'S FAILURE TO MAKE A STATEMENT ON HIS RESIGNATION.

Sri K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, on a point of order. I most respectfully submit . . .

Mr. SPEAKER: What is the book the hon. Member is having?

Sri K. A. MATHIALAGAN: Our Assembly Rules.

MR. SPEAKER : What specific rule is the hon. Member refering to?

SRI K. A. MATHIALAGAN : Rule 56 states as follows :—

(1) A Member who has resigned the office of Minister, may, with the consent of the Speaker, make a personal statement in explanation of his resignation.

நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் கடந்த மாதத்தில் ராஜீனாமா செய்தார்கள். அந்த விதியின்படி, அவர்கள் அவ்வாறு ராஜீனாமா செய்ததை இந்த மன்றத்திற்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER : The hon. Member may please read the rule again.

SRI K. A. MATHIALAGAN : According to the Hon. Chief Minister " may " means " shall ".

MR. SPEAKER : I do not want the hon. Member to refer to anybody's interpretation. What is the hon. Member's view about it?

SRI K. A. MATHIALAGAN : I shall explain, Sir.

MR. SPEAKER : All right. Let the hon. Member explain.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மரபை ஒட்டித்தான் முன்னாள் இருந்த திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், முதலமைச்சர் என்ற காரணத்தினாலும், சபையை அவமதிப்பதாகும் என்ற காரணத்தினாலும், **It amounts to contempt of the House and disrespect to the House** என்ற காரணத்தினாலும், **"may"** என்பதற்கு '**shall**' என்ற பொருள் கொண்டு விளக்கம் கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 'மே', 'ஷெல்' என்பதெல்லாம் இருக்கட்டும். சில இடங்களில் தான் 'மே' என்பது 'ஷெல்' ஆகும். கண்ணை மூடிக்கொண்டு படிக்கக் கூடாது. இப்பொழுதும் ஒரு கன்வென்ஷன் இருக்கிறது. அமைச்சர்கள் ராஜினாமா செய்தால், வேண்டுமானால் ஸ்டேட்மென்ட் கொடுக்கிறார்கள். அப்படி இல்லை என்றால், ஸ்டேட்மென்ட் கொடுக்காமல் இருக்கிறார்கள். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

MR. SPEAKER : There is no point of order in this.

III—ADJOURNMENT MOTIONS.

(1) DEATH OF A PERSON IN POLICE CUSTODY AT TIRUMANGALAM.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion to discuss a matter of urgent public importance, viz., the death of one Sri Mani, who was beaten to death while in police custody at the police station at Tirumangalam, Madurai district, on 8th August 1963. This